முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை

**E.A.No.10/2026**
**in**
**E.A.No.8/2013**
**in**
**E.P.No.20/2012**
**in**
**O.S.No.06/2011**

**சின்னத்துரை** ....மனுதாரர்/தகதாமனுதாரர்/ஆட்சேபணைதாரர்

/எதிர்/

1. ரத்தினம் ....எதிர்மனுதார்/1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி
2. அழகையா
3. லட்சுமியம்மாள் ....எதிர்மனுதாரர்கள்/2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(ஷை 2, 3 எதிர்மனுதாரர்கள் அவர்களின் பவர் ஏஜெண்டான சுரேஷ் என்பவர் மூலம்
(ஷை சுரேஷ் என்பவர் 2, 3 எதிர்மனுதாரர்களின் பவர் ஏஜெண்ட் என்பதை தகதாமனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை)

இம்மனுவானது 07.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் E.A.No.08/2013 மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.25 16:58:36 +0530

கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் 151–ன்படி, இத்துடன் தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படி E.A.No.8/2013 மனுவை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர் மனுத்தபசில் சொத்தை இந்த 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்ள உரிமையில்லையென ஆட்சேபணை செய்து மேற்படி E.A.No.8/2013 மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி E.A.No.8/2013 மனுவில் மனுதாரர் தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், இந்த E.A.No.8/2013 மனுவில் மனுதாரரை விசாரிக்கும்போது இந்த நிறைவேறுதல் மனுவின் அசல் வழக்கான அ.வ.எண்.6/2011 ஆனது 12.09.2010 தேதிய மோசடி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மனுதாரரை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சட்டத்திற்கு புறம்பாக 21.02.2011 ல் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது என்றும், அத்தீர்ப்பாணை பகரப்பட்ட சமயத்திலேயே மனுதாரர் E.A.No.8/2013 ல் கண்ட சொத்துக்களை கிரையம் பெற்றுவிட்டதாகவும், மனுதாரர் கிரையம் பெற்ற பின்னர் தான் மனுதாரரிடமிருந்து அந்த சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் போலியாக ஒரு கிரைய ஒப்பந்தத்தை தயார் செய்து, பொது அதிகார ஆவணம் ரத்து செய்து தகவல் தெரிவிக்கப்பட்ட பின்னர் மேற்படி அ.வ.எண்.6/2011 ஐ தாக்கல் செய்து 21.02.2011 ல் தீர்ப்பாணை பெற்றுள்ளனர் என்றும், எனவே, மேற்படி அசல் வழக்கு எண்.6/2011 ல் வழக்கில் 21.02.2011 ல் பகரப்பட்ட தீர்ப்பாணை செல்லாது என விளம்புகை செய்து உத்தரவிடவேண்டியதாய் உள்ளது என்றும், அதற்காக மேற்படி E.A.No.8/2013 ஐ இத்துடன் தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து உத்தரவிடவேண்டியது அவசியமாயுள்ளது என்றும், இல்லாவிடில், மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், ஆகையால்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.25 16:58:46 +0530

இத்துடன் தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படி E.A.No.8/2013 மனுவை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதில்லை என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் E.A.No.8/2013 மனுவில் அசல் வழக்கு எண்.6/2011 ல் 21.02.2011 ல் பகரப்பட்ட தீர்ப்பாணை சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி சீர்திருத்தம் செய்ய வேண்டுமென கோரியுள்ளது சட்டப்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள E.A.No.8/2013 மனுவின் சட்டப்பிரிவுகளுக்கு கோரத்தக்கதில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள E.A.No.8/2013 மனுவின் சட்டப்பிரிவுகளின்படி தாவா சொத்தின் உரிமையை பொறுத்து மட்டுமே விளம்புகை கோரமுடியுமே தவிர மனுதாரர் கோரும் பரிகாரம் சட்டப்படி கோர இயலாது என்றும், மேலும், மனுதாரர் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும், கடுமையான காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் மனுதாரர்கோரும் சீர்திருத்த பரிகாரம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்றும், அதன்பேரில் சீர்திருத்த மனுவும் சட்டப்படி ஏற்கத்தக்கதில்லை என்றும், மனுதாரர் நிறைவேறுதல் நடவடிக்கை காலம் கடத்தவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடனும், இந்த எதிர்மனுதாரரை வீண் கஷ்ட, நஷ்டப்படுத்தி தீர்ப்பின் பலனை அடையவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்துடனும் இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் இந்த நிறைவேறுதல் நடவடிக்கையை சுமார் 13 ஆண்டு காலத்திற்கு மேலாக வீண் காலதாமதப்படுத்தி இந்நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் நோக்கத்துடன் மனுதாரர் செயல்பட்டு வருவது இந்நீதிமன்றத்தின் ஆவணங்களின் மூலம் நன்கு துலங்குவதுடன், மனுதாரர் மேலும் இந்நீதிமன்றத்தின் பொன்னான காலத்தை வீணடித்து, எதிர்மனுதாரரை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் செயல்பட்டு அதனடிப்படையில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக துலங்கும் நிலையில் மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்றும்,

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.02.25 16:58:55 +0530

எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 2, 3 எதிர்மனுதாரர்கள் E.A.No.08/2013 மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

6) மனுதாரரால் இம்மனுவானது இத்துடன் தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படி E.A.No.8/2013 மனுவை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) E.A.No.8/2013 மனுவானது இம்மனுவின் மனுதாரரால், தகாத மனுவின் தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரர்/வாதி இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள் உரிமை இல்லை என தீர்மானித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி E.A.No.8/2013 மனுவானது ம.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில், இம்மனுவில் E.A.No.8/2013 மனுவில் அ.வ.எண்.6/2011ல் 21.02.2011ல் பகரப்பட்ட தீர்ப்பாணை சட்டப்படி செல்லாதது என விளம்புகை செய்யவேண்டும் என்ற பரிகாரத்தை கூடுதலாக சேர்க்க வேண்டுமென பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது.

9) அ.வ.எண்.6/2011ல் 21.02.2011ல் பகரப்பட்ட தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதா? இல்லையா? என்பதையும், மேற்படி பரிகாரம் காலவாதி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.25 16:59:05 +0530

தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதையும், மனுதாரருக்கு மேற்படி பரிகாரம் கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதையும் E.A.No.8/2013 மனுவில் மேற்படி கூடுதல் பரிகாரத்தை சேர்த்து இருதரப்பினரின் சாட்சி விசாரணைக்கு பிறகே இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலும்.

10) இம்மனு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முற்றிலுமாக தீர்மானிக்கவும், E.A.No.8/2013 மனுவின் முழுமையான தீர்மானிப்பிற்கும் மனுதாரரால் இம்மனுவில் கோரப்படும் திருத்தங்களை E.A.No.8/2013 மனுவில் மேற்கொள்ள அனுமதிக்கவேண்டியது அவசியமானது ஆகும். E.A.No.8/2013 மனுவில் அ.வ.எண்.6/2011 ல் 21.02.2011 ல் பகரப்பட்ட தீர்ப்பாணை சட்டப்படி செல்லாதது என விளம்புகை செய்யவேண்டும் என்ற பரிகாரத்தை கூடுதலாக சேர்ப்பதால் 1 வது எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை.

11) இருப்பினும், E.A.No.8/2013 மனுவானது மனுதாரரால் 13.08.2012 ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 17.01.2013 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, E.A.No.8/2013 மனுவானது ம.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. E.A.No.8/2013 மனுவானது ஏறத்தாழ 13 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள நிலையில், தற்பொழுது கூடுதல் பரிகாரத்தை சேர்க்கக்கோரி காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவால் 1 வது எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்டத்தை கருத்தில்கொண்டு, இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

12) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1 ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 03.03.2026 ம் தேதிக்குள்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.25 16:59:13 +0530

செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 03.03.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.25 16:59:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-

– இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.25 16:59:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

E.A.No.10/2026
in
E.A.No.08/2013
in
E.P.No20/2012
in
O.S.No.06/2011

உத்தரவு (Draft / Fair)

நாள் : 25.02.2026